IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# அகநானூற்றில் தித்தன்

முகவரி.முனைவர் வீ.கீதா

உதவிப்பேராசிரியர்

தமிழ்த்துறை

அ.வீரையாவாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரி(த)பூண்டி

தஞ்சாவூர்.613503

Research Summary

Sangha literature is the foremost in Tamil literature. The Sangha literature describes the life of the kings who lived in the Sangha period. The kings lived by protecting the people. Kings considered acting bravely and fulfilling the needs of the people as one of their main objectives. They enriched and beautified the country.Although the Sangha literature has recorded eight times more than ten times about these noble kings who believed in viram to protect the country, this study examines the valor of the Chola king Tithan and the prosperity of the country he ruled.

**முன்னுரை**

**சங்க இலக்கியம் அகநானூறு மன்னர்களின் வீரம்,கொடை,புகழ் நாட்டின் வளம் போன்ற மரபுவழிச்செய்திகளை உள்ளடக்கியதாக உள்ளது. இவற்றை அறிவதன் வாயிலாக பழங்காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் முறையை அறிந்துகொள்ளமுடிகிறது. தலைவன் தலைவியைச் சிறப்பிக்கும் இடங்களில், நாட்டின் நீர் வளம் நிலவளம் போன்ற மக்களின் வாழ்வியல் வளங்களை அடையாளம் காண முடிகிறது. மன்னர்கள் நாட்டையும் மக்களையும் காக்க, பகை அரசர்களை எதிர்க்கொண்ட போர் மரபு குறித்த வரலாற்றுச் செய்திகளை இவ்வாய்வு அறியமுற்படுகிறது.**

**சங்ககாலத்து மன்னர்கள்:**

சங்ககாலத்தில் வாழ்ந்த மன்னர்கள் மக்களையும், மண்ணையும். காத்து வாழ்ந்து வந்தனர். மன்னர்கள் வீரமாகச் செயல்படுவதையும் மக்களுக்குத் தேவையான வற்றை நிறைவேற்றுவதும் தனது தலையாய கடமைகளில் ஒன்றாகக் கருதினர்.நாட்டை,நாட்டின்வளத்தை, செழிப்படையசெய்து அழகுப்படுத்தினர்.மக்களைக்காத்து வாழ்வதேசிறந்த அறம் என கருதினர் . மன்னர்கள் மேற்கொள்ளும் போருக்கு படைவளம் அவசியம்என உணர்ந்தனர். இவ்வாரு சிறப்புற்று விளங்கிய மன்னர்கள்குறித்து சங்க இலக்கியம் எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் பதிவு செய்துள்ளது.நாம் ஆய்வுக்கு எடுத்துள்ள அகநானூற்றில் இடம்பெறும் .சோழமன்னன் தித்தனின் வீரம் .அவன் ஆட்சிசெய்தசோழநாட்டின் நீர் வளம், நில வளம் மன்னர்களின் போர்மரபுக் குறித்த வரலாற்றுச் செய்திகளை அறிய இந்த ஆய்வு உதவுகிறது. நாட்டு மக்களுக்குத்தேவையானவற்றை மன்னர்கள் நிறைவேற்றும்போது அத்தகைய மன்னர்களை மக்கள் இறைவனாக எண்ணுகிறார்கள்.அவற்றை வள்ளுவம்

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு

இறை என்று வைக்கப்படும் (**திருக்**-388)

**என்று திருக்குறள் சிறப்பிக்கின்றது**.

நல்லாட்சியின் அடையாளமாக மக்கள் அச்சம் நீங்கி தங்கள் வாழ்வை மகிழ்சியாக வாழமுனைகின்றனர்.இதன் விழைவாக நாட்டின் அறம் காக்கப்பட்டுகிறது. ஆட்சியில் சிறந்து விளங்கி நாட்டைக்காக்கும் மன்னர்கள் மக்களின் தேவை உணர்ந்து உதவிடவேண்டும்.அவ்வாறு உதவும் மன்னர்ளை மக்கள்தங்கள் உயிரின் மேலாக எண்ணுகின்றனர் இவற்றை,**புறநானூற்றில் மோசீகீரனார்** கீழ்க்கண்டபாடல் வாயிலாகவிளக்குகிறார்.

நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர்அன்றே

மன்னர் உயிர்த்தே மலர்தலை உலகம்

அதனால் யான் உயிர் என்பது அறிகை

வேன்மிகு தானைவேந்தற்குகடனே(புறம்- 186)

மக்களை காக்கும் மன்னன் நல்லமுறையில் ஆட்சிசெய்தால் நெல்லும் நீரும் உயிராக எண்ணமாட்டார்கள் மன்னனை, தன் உயிராக வைத்துப் போற்றுவார்கள். மக்களின்உயிரைக்காப்பது மன்னர்கள் என்பதும் தன்னலமற்ற முறையில் தன்கடமையைச்செய்வது, நீதியை நிலைநாட்டி அரசாட்சி நடத்தி மக்களைக்காப்பவர்கள் சிறந்த மன்னர்களாவர். இத்தகையசிறப்பெய்திய சோழமன்னன் தித்தன் குறித்தசெய்தியினை அகநானூற்றில் காண்போம்.

**சோழநாட்டின் வளம்**:

மன்னர்கள் மக்களைக் காப்பதில் தன்னிகர் இல்லாத தலைவனாக விளங்குகிறார்கள்.இங்கே குறிப்பிடப்படும் மன்னன் தித்தன் என்பவனின் நாடு சோழநாடுஆகும். அதன் வளம் பற்றி அறிய முற்படும்போது பல்வேறு சிறப்புகள் வெளிப்படுகிறது. சோழன் தித்தன் ஆட்சி செய்த இடம் உறையூர் . காவிரிநீர் பாயும் பகுதியும் உறையூர் ஆகும்.

நீர்வளமும் ,நிலவளமும் நிறைந்த உறையூர் நெற்குவியல் குவிந்து விளங்ககூடிய பகுதியாகும். அத்தகைய பகுதிக்குத் தலைவனாக தித்தன் விளங்கினான்

**“மாவண் தித்தன் பிண்ட நெல்லின் உறந்தை"**(அகம்:6)

என்றபாடல் உறையூரின் சிறப்பினை எடுத்துரைக்கிறது.

**தித்தன் மகள் ஐயை சிறப்பு**:

மன்னன் தித்தனின் மகள் ஐயையும் இங்கு சிறப்பிக்கப்படுகிறாள். **“இழையணி பணைத்தோள், ஐயை தந்தை, உள்ளீடு பரல்கள் பெய்த சிலம்பினையுடையவள்; நீராம்பலால் தொடுக்கப்பெற்ற மாலையினை அணிபவள்; அரத்தால் போழ்ந்து அழகியதாகச் செய்த வளைகளால் அழகு பெற்று விளங்கும் முன்கையினை உடையவள்; ஆபரணங்கள் அணிந்திருக்கும் பணைத்த தோள்களையும் உடையவள்; ஐயை என்பவள். அவளின் தந்தை, மழை வளத்தினைப்போல வரையாது வழங்குகின்ற, பெரு வண்மையினையுடைய தித்தன் என்னும் சோழ மன்னன். நெற்குவியல்கள் நிறைந்திருக்கின்ற, அவனுடைய கோநகராகிய உறையூரினிடத்தே**”என்பதை பின் வரும் பாடல் விளக்குகிறது.

அரிபெய் சிலம்பின் ஆம்பல் ஆம் தொடலை,
அரம்போழ் அவ்வளைப் பொலிந்த முன்கை,
இழையணி பணைத்தோள், ஐயை தந்தை,
மழைவளம் தரூஉம் மாவண் தித்தன்
பிண்ட நெல்லின் உறந்தை ஆங்கண்
[அகம் :6]

இங்கு ஐயை என்பவளை குறிப்பிடும் போது அவளின் தந்தை சோழமன்னன் தித்தன் சிறப்புகளையும் அறிய முடிகிறது.

**தித்தனின் சிறந்தபண்பு**:

சோழர்களின் தலைநகரான உறையூரை **தித்தன்** சிறப்பாக ஆட்சி செய்து வந்தான்.அவன் தன்னை நாடி வருபவர்களுக்கு **மழையைப்போல்** வரையாதுகொடுக்கும் சிறந்தபண்புடையவன். தித்தன் சிறந்த குதிரை

வீரன்,இவனது உறந்தைக்கோட்டைக்கு வெளியேகற்பாறைகள் நிறைந்த காவல்காடு இருந்தது.இக்காலத்தில் திருச்சியில் உள்ள மலைக்கோட்டை பொன்மலை முதலானவை அந்தக் கல் முதிர் புறங்காடுகள் எனலாம் . .சோழநாடுநெற்குவியலுடையவளமானநாடு.

சீர்சான்ற விழுச் சிறப்பின்

சிறுகண் யானைப் பெறலரும் தித்தன் (புறம்-395)

“செல்லா நல்லிசை உறந்தை." ( புறம்:395)

போன்ற பாடல்களில் தித்தனின் சிறந்தபண்புகளை அறியமுடிகிறது.

**வயல்களே வேலியாக உடைய ஊர்**:

பெரும் கொடை வள்ளல் தித்தன் என்னும் வேந்தனுக்கு உரியது உறையூர். தேம் என்னும் இன்சுவை நீரைப் பருகிய பின்னர் காலியாக உள்ள மண்கலத்தில் உறையூர் மக்கள் பாலை கறப்பர்.அங்கு வெண்ணல் விளங்கி இருக்கும் வயல்கள் வேலியாக அமைந்திருக்கும் ஊர் அது

"மாவண் தித்தன் வெண்ணெல் வேலி

உறந்தை யன்ன உரைசால் நன்கலம்."( புறம்: 352)

"நொச்சி வேலித் தித்தன் உறந்தை"( அகம். 122)

போன்ற பாடல்கள் உறையூர் பற்றிய சிறப்புகளைப்புலப்படுத்துகிறது.

**கட்டுக்காவல் உடைய ஊர்**:

காவல் வேலியையுமுடைய தித்தனது உறையூரைச் சூழ்ந்த, கல்முதிர்ந்த புறங்காடு போன்றவை நிறைந்திருக்கும்.இவனது உறந்தைக் கோட்டைக்கு வெளியே கற்பாறைகள் நிறைந்த காவல்காடு இருந்தது .தற்பொழுது திருச்சியில் உள்ள மலைக்கோட்டை, பொன்மலை, முதலானவை அந்தக் கல்முதிர் புறங்காடுகள் ஆகும்.

"நொச்சி வேலித் தித்தன் உறந்தைக் கல்முதிர்

புறங்காட் டன்ன பல்முட் டின்றால்.”( அகம்: 122)

"நொச்சி வேலித் தித்தன் உறந்தை" (அகம். 122)

"மாவண் தித்தன்வெண்ணெல் வேலி உறந்தை”

(புற-353 )

"மாவண்தித்தன்பிண்டநெல்லின்உறந்தை"

(அகம்.6)

என்றபாடல்களில் உறையூர் நெற்குவியலை வேலியாகஉடைய நாடு எனஅறியமுடிகிறது.

இத்தகையசிறப்பு வாய்ந்த தித்தனின் வரலாற்றினையும் கொடைத்தன்மையையும் காண்போம்.

**தித்தனின் வரலாறும் கொடைத்தன்மையும்**:

வராலாறு வாழ்ந்தவர்களின் வாழ்க்கையைச் சொல்லும்அந்தவகையில் தித்தனின் வரலாறு பல்வேறு உண்மைகளைப்புலப்படுத்துகிறது.”தித்தன், சோழர்க்கு உரிய பழைய தலைநகராய உறை யூரிலிருந்து ஊராண்ட ஓர் அரசனாவன். இவனுடைய உறையூர், புலவர் பலர் வாழ்வாலும், அறம் பிறழா அவை யுடைமையாலும் நிலைத்த பெரும்புகழ் உடையது. உறையூரைச்சூழ வெண்ணெல் விளையும் வயல்கள் பரந்து**க்**கிடந்து பயன் விளைக்கும்; அதனால், நெற்குவியல் பல ஆங்காங்கே நின்று காட்சி தரும்; உறையூர் தன்னைச்சூழப் பெரிய மதிலையும், சிறுசிறு மலைகளை இடைஇடையே கொண்டு, பகைவர்க்குப் பல்லாற்றானும் தடை விளைக்கும் அரிய காவற்காட்டையும் உடையது; இத்தகு வளஞ்சால் ஊரிலிருந்து உலகாண்ட தித்தன், ஒரு பெருங் கொடைவள்ளலுமாவன்.

**தித்தனுக்கு மகன் மீது பகை**:

தித்தனுக்குப் போரவைக் கோப்பெருநற்கிள்ளி என்ற பெயருடை மகனொருவனும் இருந்தான்; தித்தனுக்கு யாது காரணத்தாலோ தன் மகன்மீது வெறுப்புண்டாயிருந்தது. அதனால் போரவைக்கோ, தந்தையைப் பிரிந்து முக்காவ னாட்டு ஆமூர் அடைந்து, ஆண்டுத் தன் மற்போர் வன்மை காட்டி மகிழ்ந்து வாழ்ந்திருந்தான்; மகன்மீது மாறாச் சினம் கொண்டு துரத்திய தித்தன், மகன் மற்போர் ஆற்றலைக்கண்டு அகமகிழ்தற்கு இல்லையே என மனமிரங்கிப் பாடியுள்ளார் சாத்தந்தையார் எனும் புலவர்.

"போரருந் தித்தன் காண்கதில் அம்ம

, பசித்துப் பணைமுயலும் யானை போல

இருதலை ஒசிய எற்றிக் களம்புகு

மல்லற் கடந்தடு நிலையே.

( புறம் :10)

என்ற பாடல் தித்தனின் குணநலனை விளக்குகிறது.

**தித்தனை சிறப்பித்த பரணர்**:

தித்தன் சிறப்பினையும் அவன் வரலாற்றை உரைக்கும் பரணரே கூறியுள்ளார். தித்தன் வெளியன் உறையூரில் வாழ்ந்தவன்; அவனுக்குரிய கடற்கரை கலங்கள் பல நிற்கும் கவினுடையது; அக்கலங்களையும் சிதைக்கவல்ல இறாமீன் கூட்டமும் அக் கரைக்கண்ணே உண்டு. தித்தன் வெளியன் பெரும்படை யொன்றும் பெற்றிருந்தான்; பரணர் முதலாம் இரவலரைப் புரக்கும் கொடைக்குணமும் அவன்பால் குடி கொண்டிருந்தது. அரசவை அமர்ந்து முறையளித்தும், குறைபோக்கியும், கொடைக்கடன் **இறுத்தும் நனி சிறந்து விளங்கும் தித்தன்** சோழமன்னர்களுள் சிறந்து விளங்குபவனாக தித்தன் கருதப்படுகிறான்.இவன்ஆட்சியில் சோழர்களின் தலைநகரான உறையூரை சிறப்பாக ஆட்சி செய்து**வந்த முறையும்** தன்னை நாடி வருபவர்களுக்கு **மழையைப்போல்** வரையாது கொடுக்கும் சிறந்த பண்புடையவனாதலால்,**நெற்குவியலுடைய** சோழநாடு வளமான நாடு என்பதும் புலனாகிறது.இதன் வயிலாக சோழ நாடு செழிப்புமிக்க நாடு என்றும் தித்தன் சிறந்தப்பண்புடையவன் என்பதையும்அறியமுடிகிறது.

மன்னர்களின் கெடைத்திறன் நாட்டைக்காக்க

அவர்கள் மேற்கொண்ட போர்முறைகள் ,புலவர்களைக்காத்து,மக்களைக்காத்து ,நிலவளம், நீர்வளம்,மேம்படுத்தி மரபுகளை மீட்டுருவாக்கம்செய்த மன்னர்களை இனங்கண்டு அடையாப்படுத்துவது சமூக நல்லிணக்கம் காக்கப்படும்.நம் பண்பாடு உலகியலுக்கு அடையாளப்படுத்தப்படும்.

**அடிக்குறிப்பு**:

1.திருக்-388

2.புறம்-186

3.அகம்-பா-6

4.அகம்-பா-6

5.புறம்-395

6.புறம்-352

7.அகம் பா-122

6.தமிழ்தேடும் உலகம் ,வள்ளுவர் வட்டம்

துணை நூல்பட்டியல்:

1.புலியூர்க் கேசிகன்,: 2009:திருக்குறள் பூம்புகார் பதிப்பகம் ஈக்கிள் பிரஸ் சென்னை-3

2.புலியூர்க்கேசிகன். ஜூன் -2010 புறநானூறு மூலமும் உரையும் . சாரதா பதிப்பகம்.சென்னை-600014

3.புலியூர்க்கேசிகன் ஜீன் -2010 அகநானூறு மூலமும் உரையும் சாரதாபதிப்பகம். சென்னை -600014

4.கோவிந்தன் கா,சங்ககால அரசர்வரிசை ,ஜன-1955. சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம் சென்னை -1

5.இராகவையங்கார்-ரா தித்தன் 1949 அண்ணாமலை பல்கலைக்கழகம்.